## கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டம்- 2017

---

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை 2018 மே 30 ஆந் திகதி நிறுவனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 16**

நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்காக வினைத்திறனான ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 22,397,384 கிரயமான 17 மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தன. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் சீர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 18**

நியமத்தின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதிக் கணக்கு கூற்றுக்களில் கணக்கு மீதிகளைத் தனித்தனியாகக் காட்டுவதற்குப் பதிலாக முறையே ரூபா 7,757 மற்றும் ரூபா 41,904,480 தொகையான விவசாய உபகரண காப்புறுதி மற்றும் மூன்றாம் தரப்பினர் காப்புறுதி வருமானம் விவசாய உபகரண காப்புறுதியின் கீழ் ரூபா 41,912,237 மொத்த தொகையாகக் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 37**

நியமத்தின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையிலுள்ள சிறந்த மதிப்பீட்டினை அடையாளங்கண்டு கொள்வதற்கு உள்ளபடியான விவசாய பங்களிப்பாளர்கள் தொடர்பாக ஆயுள் கணிப்பு மதிப்பீடு செய்யப்படாது விவசாயிகளின் மரணப் பணிக்கொடை நிதியத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 21,175,440 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு**

2014 ஆம் ஆண்டின் போது நிதி மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சிடமிருந்து கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட வாகனத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 ஆண்டுகளுக்கும் 26 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் ரூபா 676,194 கூட்டு மொத்தமான ஊழியர் கடன்களையும் முற்பணங்களையும் ஊழியர் பணிக்கொடைகளிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து காலரீதியாக அறவீடு செய்யப்படாது கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தன.

(ஆ) 5 ஆண்டுகளுக்கும் 13 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட ரூபா 708,347 கூட்டு மொத்தமான பெறவேண்டிய மீதிகளைத் தீர்த்துவைப்பதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாய மற்றும் கடற்றொழில் ஓய்வூதியத் திட்டதிற்கு நிர்வாகச் செலவுகளை மேற்கொள்வதற்காக முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 124,340,973 மொத்த தொகையை அறவீடு செய்யாது தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தன.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 ஆண்டுகளுக்கும் 14 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட ரூபா 1,925,074 மொத்த தொகையான செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்தைச் செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | |
| | (II) ஆம் அத்தியாயத்தின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 6.3 ஆம் உப பிரிவு | 2002 ஆம் ஆண்டில் வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை குற்றப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 மார்ச் 30 ஆந் திகதிய DMS/34(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | முகாமைத்துச கோவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வெளிக்கள கடமைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து ஒரு நாளைக்கு ரூபா 2500 வீதம் உதவிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமை பெற்றிருக்காத மத்திய தரத்திலுள்ள முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்து வசதிகள் அலுவலக வளவிலிருந்து செல்வதற்கும் வருவதற்கும் 100 கிலோ மீற்றர் உச்ச அளவிற்கு உட்பட்டு வழங்கப்பட வேண்டிய போதிலும் போக்குவரத்துப் படிகளுக்கு தகைமை பெற்றிருக்காத ஒரு பிரிவுத் தலைவர் மற்றும் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தர் தொடர்பாக மாதத்திற்கு முறையே ரூபா 8,000 மற்றும் ரூபா 4,000 வீதம் ரூபா 1,948,000 மொத்த தொகை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் நிதி விளைவுகள் ரூபா 49,930,208 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 355,825,300 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 305,895,092 ஆல் அதாவது 86 சதவீதத்தால் ஒரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நெற் பயிர்ச்செய்கை காப்புறுதி வருமானம் பெறுவனவு ரூபா 580,565,015 ஆல் குறைவடைந்தமையும் கெதட அருண இழப்பீட்டுக் கொடுப்பனவைத் தவிர்த்து நெற் பயிர்ச்செய்கை இழப்பீட்டுக் கொடுப்பனவு ரூபா 198,433,350 ஆல் அதிகரித்தமையும் காரணமாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் போது பற்றாக்குறை காணப்பட்டிருந்தும் 2014 ஆம் ஆண்டில் மீண்டும் மிகையாக மாற்றமடைந்து 2017 ஆம் ஆண்டு வரை குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடைற்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வை மீண்டும் செம்மையாக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 20,510,517 மறைப் பெறுமதியான நிறுவனத்தின் பங்களிப்பு 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம ஆண்டுகளின் போது முறையே ரூபா 89,041,275 ரூபா 93,025,769 ரூபா 450,004,279 மற்றும் ரூபா 145,733,936 ஆக முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்திறன் மற்றும் மீளாய்வு

திட்டத்தின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் அனைத்து காப்புறுதித் திட்டங்களிலிருந்தும் ரூபா 210,000,000 தொகையை உழைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் உள்ள படியான உழைப்பு ரூபா 156,474,160 ஆக இருந்ததனால் வருமானம் ரூபா 53,525,840 ஆல் அதாவது 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதி முறைமையின் வருமானம் உழைக்கும் இலக்கு ரூபா 29,833,000 ஆக இருந்த போதிலும் அதனை நிறைவேற்றுதல் ரூபா 5,313,362 ஆக இருந்ததனால் அதன் செயல்முன்னேற்றம் 18 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 66 சதவீத குறைவாகும்.

(இ) விவசாய உபகரண காப்புறுதிக்காக 16 மாவட்டங்களிலிருந்து ரூபா 2,343,000 தொகையான வருமானத்தை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது 07 மாவட்டங்களிலிருந்து ரூபா 40,055 மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 05 மாவட்டங்களில் 490 நெற் களஞ்சியங்களை காப்புறுதி செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் ஒரு களஞ்சியம் மாத்திரம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது.

(உ) இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளும் போது விவசாயிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கி மிகவும் குறுகிய காலத்துக்குள் நட்டத்தை மதிப்பீடு செய்து உரிய இழப்பீட்டுப் பணத்தை வழங்குவதற்காக தூர நோக்கை அடிப்படையாக கொண்ட ஒரு காப்புறுதித் திட்டத்தை 05 மாவட்டங்களில் அமுல்படுத்துவதற்கு சபை உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிசார் நிதியத்துடன் 2016 மே 05 ஆந் திகதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. உரிய செயற்திட்ட நடவடிக்கைகளை 2019 மே 04 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அறிக்கைத் திகதி வரையும் வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் இது அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) வெங்காயம், குரக்கன், உழுந்து, நிலக்கடலை, கௌபி, பாசிப்பயறு, எள்ளு, வெற்றிலை, மிளகு, இறுங்கு, கொக்கோ, தேயிலை, தென்னை, மரக்கறி, பழங்கள், பூக்கள், முந்திரிகை, கரும்பு, பாக்கு ஆகிய காப்புறுதி திட்டங்கள் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததும் அவை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) கடற்றொழில் மற்றும் காட்டுப் பயிர் உற்பத்திக்கு காப்புறுதி ஆரம்பிக்கப்படாமை, போட்டி ரீதியான புதிய காப்புறுதித் திட்டங்களின் தேவைப்பாட்டை இனங்கண்டு அமுல்படுத்தாமை, மற்றும் வணிக வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்குகின்ற கடன் திட்டங்களை ஆய்வு செய்து மிகவும் ஆக்கபூர்வமான காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்தி விவசாயிகளை காப்புறுதி முறைமைகளுக்கு ஊக்குவிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பெருந்தோட்ட அதிகாரசபையின் மூலம் எம்பிலிபிடிய மாவட்ட அலுவலகத்தை பேணுவதற்காக வழங்கப்பட்ட காணிக்காக 31 ஆண்டுகளுக்கு ரூபா 2,764,344 தொகையான நிலுவைக் குத்தகை செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்த தவறினால் 2017 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் 10 சதவீத மிகைக் கட்டணம் சேர்த்துக் கொள்ளப்படும் எனவும் மஹாவலி அதிகாரசபையினால் சபைக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இதற்காக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆண்டுகளை அண்மித்த காலமாக கட்டாய விடுமுறையில் சென்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016/2017 பெரும் போகத்தின் போது வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஒரு விவசாயிக்கு ரூபா 10,000 வீதம் இழப்பீட்டுப் பணத்தை செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தது. அந்த இழப்பீட்டுப் பணத்தில் காப்புறுதித் தவணைப் பணமாக ரூபா 1,350 கழிக்கப்பட்டு ரூபா 8,650 வீதம் மாவட்ட அலுவலகத்தால் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் அனுப்பப்பட்ட இழப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களின் மூலம் (SLIP Transaction) கொடுப்பனவு இடம் பெற்றிருந்தும் அந்த தொடக்க அறிக்கை சபையினால் மீண்டும் பரிசீலினைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இடைப்பயிர் சேதமடைந்த 32 விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 276,800 பணம் குருநாகல் மாவட்டத்திலுள்ள கல்கமுவ மக்கள் வங்கிக் கிளையில் ஒரு விவசாயின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30 ஆந் திகதி வரை அது தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இழப்பீட்டு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை இலக்கம் இரட்டிப்புச் செய்யாத வகையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமெனத் தெரியப்படுத்தியிருந்தும் நாட்டின் 10 மாவட்டங்களில் 414 விவசாயிகளுக்கு ஒரே அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஒரே பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 3,581,100 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) இழப்பீடு பெறுபவர்களின் அடையாள அட்டை இலக்கம் பெயர் வேறுபட்டதன் காரணமாக 9587 விவசாயிகளுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 82,927,550 மொத்த தொகை வங்கி மூலம் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30 ஆந் திகதி வரை அவர்களில் 6461 விவசாயிகளுக்கு ரூபா 57,366,800 பணம் செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) விவசாயப் பிரதிநிதிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக சபையின் மாத்தறை மாவட்ட அலுவலகத்திற்கு ஒப்படைப்பதற்கு 2017 மார்ச் 01 ஆந் திகதி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) எடுத்துச் சென்ற ஆகக் குறைந்த சந்தைப் பெறுமதி ரூபா 470,000 தொகையான 1000 காப்புறுதிப் பத்திரங்கள் மற்றும் ரூபா 31,970 பெறுமதியான 46 ரீ சேட்டுக்கள் மற்றும் 2,000 வாகன விண்ணப்பப் பத்திரங்கள் காணாமல் போயிருந்தன.

(உ) 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து அறவிடப்பட்டுள்ள ரூபா 30 வீதமான விவசாய ஓய்வூதிய காப்புறுதி தவணைப் பணம் ரூபா 194,619,125 மொத்த தொகை கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தினால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 ஆம் ஆண்டின் போது 44 முகாமைத்துவ உதவியாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்காக ரூபா 137,640 தொகையும் மாவட்ட மட்டத்தில் நேர்முகப்பரீட்சையை நடாத்துவதற்கு ரூபா 843,298 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தும் 2018 யூன் 30 ஆந் திகதி வரை எதுவித ஆட்சேர்ப்பும் இடம்பெற்றிருக்காமையால் ஒட்டுமொத்தச் செலவான ரூபா 980,938 பணம் விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

(எ) 2010 ஆம் ஆண்டிலிருந்து நிறுவனத்தின் செயலாற்றலை முன்னேற்றுவதற்கு காணப்படுகின்ற தடையாக பின்வரும் பலவீனங்கள் இனங்காணப்பட்டிருந்தும் அவற்றை நீக்குவதற்கு முகாமைத்துவதற்கு இதுவரை முடியாதிருந்தது.

(i) ஆயுள் கணிப்பு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக விசேட அறிவைக் கொண்டுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை.

(ii) நிபுனத்துவத்தைக் கொண்டுள்ள பதவியணியினரின் ஆற்றல்களை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள தடைகள்.

(iii) புதிய தொழில் நுட்பத்திற்கு இணங்க செயற்படக் கூடிய பதவியணியினரின் பற்றாக்குறை.

(iv) நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் போதியளவில் இல்லாமை மற்றும் தலைமை அலுவலகத்திற்காக நிரந்தர அலுவலகக் கட்டிடம் இல்லாமை.

(v) போட்டி நிறுவனங்களுடன் ஒப்பிட்டு நிறுவனத்திற்குச் சொந்தமான அலுவலக உபகரணங்கள் உயர்ந்த தொழில்நுட்ப மட்டத்திலும் தேவையான தரத்தினையுடையதாகவும் இல்லாமை.

**4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

---------------------------------------------------------

விவசாயப் பிரதிநிதிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2017 மே மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 157,920 பெறுமதியான 282 ரீ சேட்டுக்கள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான செயற்படக்கூடிய நிலையில் உள்ள 07 வாகனங்கள் காணப்பட்டிருந்தும் சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகளின் எண்ணிக்கை மூன்று நபர்களாக மாத்திரம் இருந்ததன் காரணமாக அந்த வாகனங்கள் குறைந்த பாவனைக்கு உட்பட்டிருந்தன.

(ஆ) 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாது காணப்பட்ட எம்பிலிபிட்டியவில் அமைந்துள்ள ஒரு உத்தியோகபூர்வ இல்லத்திற்கு தேவையான திருத்தங்களைச் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------

பின்வரும் அசதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயக் காணியின் மற்றும் விவசாயத்தின் தவகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சின் கீழுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு 1000 நடமாடும் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பயிர்ச்செய்கை அழிவுக்காக மீள்காப்புறுதியாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக கேட்பு மனுக்களைக் கோருவதற்காக பத்திரிகையின் மூலம் விளம்பரங்களை வெளியிடுவதற்காக முறையே ரூபா 115,115 மற்றும் ரூபா 32,000 செலவு செய்யப்பட்டிருந்தன எவ்வாறாயினும் அச்செயற்பாடுகளை நிறைவேற்றாமையின் காரணமாக பத்திரிகை விளம்பரங்களுக்காக செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்ற செலவாக இருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படிகளை கவனத்திற்கு கொள்ளாமையின் காரணமாக 2006 சனவரியிலிருந்து 2013 ஏப்ரல் வரை தொழிலாளர்களினதும் தொழில் தருனரினதும் நிலுவைப் பங்களிப்பாக ரூபா 29,409,723 தொகையும் மிகைக் கட்டணமாக ரூபா 14,704,862 தொகையும் செலுத்த வேண்டி இருந்தது.

(இ) சபைக்கு அலுவலகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக நீர் வழங்குவது தொடர்பாக 2008 யூன் 04 ஆந் திகதி இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 565,800 செலுத்தப்பட்டிருந்தும் செயற்திட்டத்தை கைவிட்டதன் காரணமாக அப்பணம் சிக்கனமற்ற செலவாக மாறியிருந்தது. எவ்வாறாயினும் அப்பெறுமதி மூலதன முற்பணமாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் இன்னும் காட்டப்பட்டிருந்தன.

### 4.6 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 பதவிப் பெயர்களில் காணப்பட்ட 119 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 ஆம் ஆண்டின் போது 09 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றுச் சென்றமை. ஒப்பந்தம் மற்றும் அமைய அடிப்படையில் 49 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை ஆகிய காரணங்களால் ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஒட்டுமொத்த செயலாற்றல் மட்டம் ஆகக் குறைந்த நிலையில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மற்றும் சபையின் அங்கீகரித்த பதவியணியில் உள்ளடக்கப்படாத வணிக அபிவிருத்தி முகாமையாளர் பதவிக்காக நான்கு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு மூன்றாம் தரப்பினர் காப்புறுதித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது அவர்களுக்கு ரூபா 40,000 மாதாந்தப் படி ரூபா 35,000 வாகனப் படி 250 லீற்றர்களுக்குச் சமமான எரிபொருள் படி என்பனவாக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 8,071,022 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவற்றில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ரூபா 3,769,660 பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஆண்டு 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்காக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தால் தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

(அ) ஏதாவது செயற்பாட்டின் சரியான தரவு அடிப்படையொன்றினை வைத்திருப்பது அத்தியவசியமானதாக இருந்த போதிலும் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்காக காப்புறுதி செய்தல் விவசாயிகள் தொடர்பாகவும் விவசாய காணிகள் தொடர்பாகவும் சரியான தரவு அடிப்படையொன்றினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 ஆம் ஆண்டு வறுமையற்ற ஆண்டாக இனங்காணப்பட்டிருந்ததுடன் குறிக்கோள்களின் பிரகாரம் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தால் வறுமை மட்டம் பாரதூரமாகக் காணப்படுகின்ற மாவட்டங்களாகப் பெயரிடப்பட்டுள்ள மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களுடாக பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தும் பகிரங்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் போது மூன்றாம் தரப்பினர் காப்புறுதி வருமானத்தை அதிகரிப்பதற்காக மாத்திரம் பகிரங்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் போது அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களின் கீழ் காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களுக்கு எதிராக விரைவாகச் செயற்படுவதற்காக இனங்காணப்பட்ட இலக்குகளாக தூர நோக்கை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதித் திட்டத்தை இனங்காண்பதன் மூலம் இழப்பீட்டைச் செலுத்துதலை செயற்திறனாக்குவதற்கு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் தற்பொழுது அது வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் அமுல்படுத்தப்படுகின்றது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிற்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே 68 சதவீதத்திற்கும் 419 சதவீதத்திற்குமிடைப்பட்ட முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 6.2 பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்தாமை.

2016 பெப்ரவரி 26 ஆந் திகதி இடம்பெற்ற பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் 13 ஆவது கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பன பதவிகளுக்கு நிரந்தர சம்பளங்களுக்கும் படிகளுக்கும் மேலதிகமாக ஏனைய படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தில்லாதிருந்தும் 2017 ஆம் ஆண்டில் கடற்றொழில் ஓய்வூதிய விசேட படியாக ரூபா 438,428 தொகையும் விவசாயிகள் ஓய்வூதிய விசேட படியாக ரூபா 812,250 தொகையும் காப்புறுதி ஆணையாளர் மற்றும் ஊக்குவிப்பு படியாக ரூபா 11,995,426 தொகையும் அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவரது கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பான விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | காணப்படும் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | (i) தாமதமின்ற இழப்பீட்டுக்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) இழப்பீடுகள் செலுத்தும் போது உரிய நபர்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | காப்புறுதி | (i) கால போகம் ஆரம்பிப்பததுடன் காப்புறுதிக்காக நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) விவசாயக் காப்புறுதிக்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | பெறவேண்டிய கணக்குகள் | கடன்கள் மற்றும் முற்பணங்களை அறவீடு செய்தவற்கு நடவடிக்கைகளை எடுக்காமை. |